# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 May 2018 Issue - 5


ஆசிரியர் உரை

## தேவன் ஒப்புக்கொடுக்கிறார்

**கொ**டுத்தல் என்னும் சொல்லுக்கும், விட்டுக்கொடுத்தல் என்னும் சொல் தொடருக்குமான பொருள் நாம் அறிந்த ஒன்றுதான். கொடுத்தல் என்பது இளகிய மனதுடன் நடந்து, நம்முடையதிலிருந்து கொஞ்சம் இழப்பது. விட்டுக் கொடுத்தல் என்பது தாராள மனதுடன் நடந்து நமக்குச் சேர வேண்டியதை விட்டுவிடுவது. குடும்பத்திலும், சமுதாயத்திலும் நல்ல மனிதர்களாக வாழ விரும்புபவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு அனுசரித்துப் போகிறவர்களாகவே இருப்பர். ஆனால் ஒப்புக் கொடுத்தல் என்னும் சொற்றொடர் மேலான பொருளை உள்ளடக்கிய ஒன்றாக உள்ளது. எப்படியெனில், கொடுப்பதற்கு இளகிய மனதும், ஒப்புக்கொடுத்தலில் விட்டுக் கொடுப்பதற்குத் தாராள மனதும் இருந்தால் போதும். ஆனால், ஒப்புக் கொடுப்பதற்குத் தியாக சிந்தை வேண்டும். ஏனெனில் இருப்பதையெல்லாம் பிறருக்காக அல்லது பிறர்நிமித்தம் துறக்க வேண்டும் அல்லது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து முற்றிலுமாக அந்நியப்படுத்திக் கொள்ளவேண்டும். இதுதான் உண்மையான ஒப்புக் கொடுத்தல்.

தியாகச் சிந்தைக்கு எடுத்துக்காட்டாக விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தன் ஏக சுதனாகிய ஈசாக்கை பலியிட்டதை நாம் கூற முடியும்.... **உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால்** என்று தான் வசனத்தில் உள்ளது (ஆதி.22:12). இன்னும், அந்நியப்படுத்திக் கொள்வதற்கு ஆதாரமாக, ரோமர் 1-ம் அதிகாரம் 24,26,28-ம் வசனங்களை நாம் மேற்கோள் காட்டலாம். ஆம், தேவன் அவர்களை **அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார். தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்** என்று அடுத்தடுத்து வாசிக்கிறோம்.

இப்படி ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களிடமிருந்து தேவன் நிச்சயமாகவே தன்னை அந்நியப்படுத்திக் கொள்வார். எபிரெயர் நிருபத்தின் கூற்றுப்படி, அப்படிப்பட்டவர்களின் தேவன் என்று சொல்லிக் கொள்ள **தேவன் வெட்கப்படுவார்** (எபி.11:16).

சரி, இப்படி யாருக்குச் சொல்லப்பட்டது, யாரால் சொல்லப்பட்டது, ஏன் சொல்லப்பட்டது, எப்பொழுது சொல்லப்பட்டது என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள நமது வழக்கத்தின் படி இதன் பின்னணிக்குள்ளாகச் சென்று வருவோம்.

புதிய ஏற்பாட்டில் பவுலடியாரால் எழுதப்பட்ட 13 அல்லது 14 நூல்களுள் ரோமர் நிருபம் தனித்துவம் வாய்ந்தது. மற்ற நிருபங்கள் கிறிஸ்துவின் உபதேசம் மற்றும் கிறிஸ்தவ செயல்பாடுகள் பற்றி அதிகமாகப் பேசும் போது, ரோமர் நிருபம் கிறிஸ்துவின் தியாக பலியை முக்கியப்படுத்திப் பேசுகிறது. அது மாத்திரமல்ல, இந்நிருபத்தை வாசிப்பவர்களுக்கு எப்படிப்பட்ட கேள்விகள் எழ வாய்ப்பிருக்கிறது என்று தானே நிதானித்து அவைகளை எழுப்பி அவைகளுக்குப் பதில் கொடுத்து எழுதியிருக்கிறார்.

இப்படிப்பட்ட நூலை பவுலடியார் தனது மூன்றாவது நற்செய்திப் பயணத்தின் போது, கொரிந்து பட்டணத்திலிருந்து எழுதி, பெபேயாள் என்ற ஊழியக்காரி மூலமாக, கி.பி 57–ல் கொடுத்தனுப்பியுள்ளார் (ரோமர் 15:25). பவுலடியாரால் ஆரம்பிக்கப்பட்ட சபையாக இது இல்லாமலிருந்தபடியாலும், இச்சபையாரை பவுல் நேரில் சந்திக்காதபடியாலும் இந்நிருபத்தின் ஆரம்பத்தில் தான் யார் என்பதை அறிமுகம் செய்து கொள்கிறார். பவுலடியார் மாத்திரமல்ல, ஏனைய எந்த அப்போஸ்தலரும் ரோமபுரிக்குச் சென்றதில்லை. அப்படியானால், அங்கு சபை எப்படி ஆரம்பமாயிற்று என்ற கேள்வி எழுகிறது. அப்படித்தானே! சரி, முதல் நூற்றாண்டில், எருசலேம் பட்டணத்தில் கிறிஸ்து வாக்களித்தபடி சபை ஆரம்பிக்கப்பட்ட அம் மகாநாளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்று, அப்போஸ்தலர்கள் பேசின பற்பல பாஷைகளைப் பேசினதைக் கேட்டவர்களில் ரோமர்களும் (அப்:2:10) அடங்கியிருந்தனர். இவர்கள் அந்த பிரமிப்பைக் கண்டதோடு, பேதுருவின் பிரசங்கத்தையும் அந்நாளில் கேட்டார்கள். விளைவு? அன்றையத்தினம் இரட்சிக்கப்பட்ட 3000 பேரில் ரோமாபுரி யூதர்களும் அடங்கியிருந்திருக்கிறார்கள். அவர்களில் கணிசமான பேர் அதே வேகத்தில் அதே வைராக்கியத்துடன் ரோமுக்குத் திரும்பி வந்து நற்செய்தியை அறிவித்ததின் பயனாக அநேகர் கீழ்ப்படிந்துள்ளதாகத் தெரிகிறது. அன்றைய உலகத் தலைநகரமாக இருந்த ரோமத் திருச்சபையில் யூதர்களும், புறவினத்தவர்களும் அங்கம் வகித்துள்ளனர். ரோமச் சபையில் இருந்த யூதர்கள் மோசேயின் பிராமணத்தின் அவசியத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததால், கிறிஸ்துவின் சுவிசேஷம் தான் இரட்சிக்கும் வல்லமை கொண்டது. என்பதை நிலை நாட்டும்படியாகப் பிரதானமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது (ரோமர் 1:16).

இப்படிப்பட்ட நூலின் முதல் அதிகாரத்திலுள்ள 18–32 வசனப்பகுதியில், புறஜாதி உலகத்தின் பாவ நிலைபற்றி விளக்குகிறார். இப்பகுதியில்தான், இரண்டிரண்டு வசன இடைவெளியில் ஒப்புக் கொடுத்தல் என்ற சொற்றொடர் மூன்றுமுறை வருகிறது. அம்மூன்று முறையும் தேவன் எதற்காக அப்படி ஒப்புக் கொடுத்தார் என்பதற்கான காரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கவனிக்கும்போது ஆச்சரியப்படத்தக்க வகையில் தேவத்தன்மைக்கு இது சற்றும் சம்பந்தமில்லாததாகத் தெரிகிறது. ஏனெனில், அன்பின் தேவன், இரக்கத்தின் தேவன், கிருபையின் தேவன், பொறுமையின் தேவன், தீமைகளை நடப்பிக்கும்படி இப்படி ஜனங்களை ஒப்புக்கொடுத்து விட்டாரே, பாவம் மனிதன் இதற்கு மேல் என்னதான் செய்துவிட முடியும் என்றுகூட எண்ணத் தூண்டுகிறது. ஆனால், தேவன் ஒருபோதும் நீதி தவறமாட்டார். மானிடர் அனைவரையும் நேசித்து தன் ஒரே குமாரனையே ஈவாகத் தந்து (யோவான் 3:16), மானிடர் அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விருப்பம் கொண்டுள்ள தேவன் (1தீமோ.2:4; 2பேதுரு 3:9) மனிதன் அழிந்து போகும்படியாக ஒருபோதும் ஒப்புக் கொடுக்க மாட்டார்.

மாறாக, தன்னால் கொடுக்கப்பட்டுள்ள சாட்சியங்களையும் எச்சரிப்புகளையும் துச்சமாக மதித்து, தன்னால் கொடுக்கப்பட்டுள்ள மனசாட்சியைத் துப்புரவாக இழந்து, தொடர் பாவச் செயல்களில் துணிகரமாக ஈடுபடும்போது, தன்னுடைய மாறாத நீதியினிமித்தம் வேறு வழியில்லாமல் அப்படிப்பட்டவர்களிடமிருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொள்ளும்படியாய், அவர்களை தீமைக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறார். இதுபோன்றதொரு கருத்தைத் தான் பவுலடியார் தெசலோனிக்கேயருக்கு எழுதும்போதும் பதிவுசெய்திருக்கிறார். **ஆகையால், சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அனுப்புவார் என்று** (2தெச.2:12). இங்கே, கொடிய வஞ்சகத்தை அனுப்புகிற அதே தேவன்தான் அங்கே, தீமையானவைகளை நடப்பிக்கும்படி ஒப்புக்கொடுக்கிறவராக இருக்கிறார்.

சரி, இப்பொழுது தேவன் எப்படிப்பட்ட தீமைகளுக்கு ஜனங்களை ஒப்புக்கொடுக்கிறார் என்று கண்டு, அவைகளிலிருந்து நமக்கு என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று கவனிப்போம்.

### I தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் (வ.24)

பரலோகத்தின் தேவன் தீமைக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்கிற வரிசையில், முதலாவது நாம் கவனிக்க இருப்பது, தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார் என்பது.

இதே பவுலடியார், இதே நிருபத்தின் 12-ம் அதிகாரம் முதல் வசனத்தில், **அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் என்கிறார்.** இப்படி ஒரு சாராரின் சரீரங்களில் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிற தேவன், மற்றொரு சாராரின் சரீரங்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுக்கிறார் என்று காண்கிறோம். அப்படியானால், யாருடைய சரீரம் பரிசுத்தமானதாகவும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். யாருடைய சரீரத்தை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுக்கிறார் என்ற நியாயமான கேள்வி வருகிறது. அப்படித்தானே!

12-ம் அதிகாரத்தில், **சகோதரரே** என்றழைக்கப்படுபவர்கள், இரட்சிப்பிற்கு தேவபெலனாயிருக்கிற கிறிஸ்துவின் நற்செய்திக்கு அதன் உபதேச சட்டப்படி கீழ்ப்படிந்தவர்கள் (ரோமர்1:6,7,16). தேவன் யாரை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறாரோ அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தங்களைக் கீழ்ப்படுத்த விரும்பாத புறவினத்தார். பரலோகத்தின் தேவன், காரணகாரியங்களின் தேவனாக இருக்கிறபடியால், அப்படிப்பட்டவர்களை அசுத்தத்திற்கு ஏன் ஒப்புக்கொடுக்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லி விட்டுத்தான் அப்படி ஒப்புக்கொடுக்கிறார்.

சரி, இங்கே ஆவியானவர் கூறுவதைப் பாருங்கள்: அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (1:21). அப்படியானால், தேவனை அறிந்துகொள்ளும்படியான வாய்ப்பை தேவன் அவர்களுக்குக் கொடுத்தே இருந்தார். சங்கீதம் 19:1- ம் வசனத்தைப் பாருங்கள். வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது என்று. தேவன் தம்மை உலகத்தோற்றம் முதல் வெளிப்படுத்தியே வந்திருக்கிறார் என்று பர்னபாவும், பவுலும் லீஸ்திரா பட்டணத்தில் முழங்கியுள்ளனர். சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும் அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழையையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து ஆகாரத்தினாலும், சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை என்றார்கள் (அப்.14:16,17). இந்த உண்மை புறவினத்தாருக்குப் புரியாமல் இருக்கவில்லை. ஆயினும் மகிமைப்படுத்தவோ, அந்தத் தேவன் செய்கிற நன்மைகளுக்கு நன்றி சொல்லவோ அவர்களுக்கு மனமில்லை. காரணம் அவர்களுடைய கண்கள் இருளடைந்திருந்தது.

ஒரு மனிதனின் பக்திச் செயல்பாட்டுக்கு இருதய நிலை மிகவும் முக்கியம். ஞானி சாலமோன் இது குறித்துச் சொல்லும்போது, அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் என்று கூறுகிறார் [நீதி.23:7]. இருதயம் இருட்டாகி விடுமானால், பக்தி வாழ்வும் இருட்டாகவேமாறும். ஆகவேதான், அதே ஞானி எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள் என்கிறார் [நீதி.4:23].

அதுமாத்திரமல்ல, தங்களை ஞானியென்று சொல்லி பைத்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள் இவைகளுக்கு ஒப்பாக மாற்றினார்கள் [வ.22,23]. ஆனால், தங்கள் பார்வைக்கு ஞானிகளும் தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ! [ஏசாயா 5:21] என்று ஏசாயா தீர்க்கன் கூறின உண்மை இந்த மக்களுக்கு ஏனோ புரியாமல் போய்விட்டது.

ஆகவேதான், வசனம் 24 இவ்விதம் கூறுகிறது. இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப் படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் என்று. **இதினிமித்தம்** என்னும் வார்த்தை மிகவும் முக்கியம். தேவன், முதலில் தீமையானவைகளுக்கு மனிதனை அனுமதிப்பதில்லை. அவன் இருதயத்திலே சீர் செய்ய முடியாத அளவு கெட்டுப்போகும்போது, அவர்களில் உண்டான துர் இச்சைகளின் விளைவாகத் தேவன் அப்படி ஒப்புக் கொடுக்கும்படியான நிலைக்குத் தள்ளப்படுகிறார். தேவனை நாம் ஒருபோதும் குறைசொல்லக் கூடாது.

அருமையானவர்களே! இங்கே நாம் கண்ட புறஜாதி ஜனங்களின் நிலையோடு, இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். அவர்கள் ஒன்றான மெய்த் தேவனை அறிந்து கொள்ளும்படியான வாய்ப்புப் பெற்றும் தங்கள் இருளான இருதயத்தினிமித்தமும், பொய்யான ஞானத்தினிமித்தமும், தங்கள் இச்சைகளின்படி நடந்து கொண்டது போல, இன்றைய கிறிஸ்தவம் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டு [ஏசாயா2; தானி.2], யோவான்ஸ்நானால் பிரசங்கிக்கப்பட்டு [மத்.3:2], இயேசுவால் வாக்களிக்கப்பட்டு [மத்.16:18], அப்போஸ்தலர்களால், பிரசங்கிக்கப்பட்ட [அப்.2] ஒன்றான மெய்ச்சபையை அடையாளம் கண்டு, சாட்சியங்களினடிப்படையில் ஏற்றுக்கொள்ளாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறதோ? இதன் விளைவுதான், அவர்கள் ஏராளமான தெய்வங்களை உண்டாக்கியது போல, ஏராளமான சபைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுப் பின்பற்றப்படுகிறதோ? உலகத் தோற்ற முதல் கொடுக்கப்பட்டிருக்கும் சாட்சியங்களை வைத்து, மெய்யான தேவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பது தேவ எதிர்பார்ப்பாக இருக்குமானால், ஆவியானவரால் பழைய ஏற்பாட்டுக் காலம் முதல் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களை வைத்து மெய்யான தேவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பது, தேவ எதிர்பார்ப்பாக இருக்காதா? நீங்களே சொல்லுங்கள்.

## II. **தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் [வ.26]**

பரலோகத்தின் தேவன் தீமைக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்கிற வரிசையில் இரண்டாவதாக நாம் கவனிக்க இருப்பது, தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார் என்பது.

இப்படி இழிவான இச்சை ரோகங்களுக்குத் தேவன் ஏன் ஒப்புக்கொடுக்கிறார் என்பதற்கான காரணம் வசனம் 25ல் கொடுக்கப்பட்டுள்ளது. **தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் ஆமென். இதினிமித்தம், தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்** என்றுள்ளது. அப்படி ஒப்புக்கொடுத்ததின் விளைவு படுமோசமாக மாத்திரமல்ல, வெட்கக்கேடாகவும் இருந்ததென்பதை 26,27 –ம் வசனங்களில் நாம் முகச்சுளிப்போடு பார்க்கமுடிகிறது. அத்தோடு தேவன் வகுத்த சட்டத்திற்குப் புறம்பான அவலட்சண செயல்பாட்டுக்கான தண்டனையும் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

ஒரு மனிதனுக்கு ஏற்படும் பசி, தாகம் போன்று பாலியல் உணர்வும் ஆண், பெண் இருபாலருக்கும் இயல்பான, இயற்கையான ஒன்றுதான். பசி, தாகம் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவன் எப்படி நியாயமான வழிமுறைகளை வைத்துள்ளாரோ, அதுபோன்று பால் உணர்வுகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் நீதியான வழிமுறைகளை வகுத்துள்ளார். மத்தேயு ஆசிரியர் கூறும்போது அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக, ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும், பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? என்று கேட்டுள்ளார் [மத். 19:4,5]. இப்படி, தேவச் சட்டத்தின்படியான ஆண், பெண் உறவுக்கு அப்பாற்பட்டு நடந்து கொள்வது. இழிவான இச்சை ரோகம் சம்பந்தமானதாகவே உள்ளது. இதன் மூலம், சரீரத்தில் கடுமையான, கொடுமையான வியாதிகள், அது தரும் வேதனைகள், அதன் மூலமான மன வியாதிகள் என்று பல வகையான தண்டனைகள் அவர்களுக்குக் கிடைத்தே உள்ளது.

இப்பகுதியில் நாம் கவனிக்க வேண்டிய காரணங்களில் ஒன்று வசனம் 25–ல் உள்ளது. ஆம், தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி,சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்....... என்பது, இது, ஏதோ விக்கிரக வழிபாடு கொண்டவர்கள் சம்பந்தப்பட்டது என்று எண்ணி நாம் ஏமாந்து விடக் கூடாது.

எப்படியெனில், **தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றி** என்பதை மட்டும் நான் எடுத்துக் கொள்கிறேன். அங்கே, சத்தியத்தைப் பொய்யாக மாற்றினார்கள் என்பது, சிருஷ்டியாகிய தேவனை வணங்காமல், விக்கிரகங்களை வணங்கியதைக்

குறிப்பதாக உள்ளது. ஆம், தொழுகை என்பது தேவனை நோக்கினதாக, ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டுமேயொழிய விக்கிரகங்களுக்கு இடமளிப்பதாக இருக்கக் கூடாது. **ஆவியோடு** என்பது சரியான மனநிலையோடு என்பதையும், **உண்மையோடு** என்பது கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வசனங்களின் உபதேசத்தோடு என்பதையும் குறிக்கிறது. அப்படியானால், நம்முடைய ஆராதனை எப்படி? [யோவான் 4:24]. சத்தியத்தைப் பொய்யாக மாற்றுதல் என்பது, தொழுகையோடு மாத்திரம் நிற்காமல், அதைத் தாண்டி அது பல பரிமாணங்களை ஆவிக்குரிய நிலையில் எடுத்து கிறிஸ்துவின் உபதேசத்தை அவமாக்கி விடுகிறது. எச்சரிக்கையாயிருப்போம்!

அன்பானவர்களே! தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றினவர்கள் தங்கள் செயல்பாடுகளளில் கேடுபாடடைந்து, அதற்கான தண்டனையைப் பெற்றார்கள் என்று வேதம் அடித்துக் கூறும்போது, நாம் நம்முடைய பக்திக் காரியங்களில், கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடப்போமானால், அதாவது புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை மீறி நடப்போமானால் தண்டனைக்குத் தப்ப முடியுமென்று எண்ணுகிறீர்களா? முடியாது.

III. **தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் [வ.28]**

பரலோகத்தின் தேவன் தீமைக்கு ஒப்புக்கொடுக்கிறவர் என்கிற வரிசையில், மூன்றாவதாக நாம் கவனிக்க இருப்பது, தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் என்பது.

தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தும் [வசனம்19], அவர்கள் தேவனை அறிந்து கொள்ளாதவர்களாகவே இருந்துள்ளார்கள். இதுதான் புறஜாதியாரின் எல்லாவிதமான பாவங்களுக்கும் அடிப்படையாக மாறிவிட்டது. மெய்யான தேவன் பற்றியும், அவருடைய காரியங்கள் பற்றியும் மனிதன் அறிந்து ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கான பிரதான காரணம், அவர்களின் பாவச்செயல்களுக்கு **தேவன் தடையாக இருப்பார்** என்பது தான். தங்கள் அக்கிரமச் செயல்களுக்கு கணக்குக் கொடுக்க அவர்களுக்கு மனமில்லை. இதன் விளைவாக, ஏற்கனவே, தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாகத் தேவன் அவர்களை சுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

கேடான சிந்தை என்பது, ஒழுக்க நெறிகளுக்கு முற்றிலும் அப்பாற்பட்ட சிந்தை. முழுமையாக பாவத்திற்கு அடிமைப்பட்ட சிந்தை. இச்சிந்தையுள்ளவர்கள் தகாதவைகளைத் தான் செய்வார்கள். பிலிப்பியர் 4:8-ல் நாம் பார்க்கும் உண்மை, ஒழுக்கம், நீதி, கற்பு, அன்பு, நற்கீர்த்தி, புண்ணியம், புகழ் என்னும் கிறிஸ்தவ நெறிகளெல்லாம் இவர்களுக்கு வெறுப்பானவைகளாக இருக்கும். இவர்களின் தகாத செயல்பாடுகள் பற்றி, ரோமர் 1:29-31 வசனப்பகுதியில் பட்டியலிடப்பட்டிருக்கிறது.

கலாத்தியர் 5-ம் அதிகாரத்தில், ஆவியின் கனிகள் 9 என்றும் மாம்சத்தின் கிரியைகள் என்று 17-ம் பார்க்கிறோம். ஆனால், தகாதவைகளைச் செய்யும்படி தேவனால் ஒப்புக் கொடுக்கப்பட்ட இந்தக் கேடான சிந்தைக்காரர்களின் பாவச் செயல்பாடுகளோ அநியாயம், வேசித்தனம் , துரோகம், பொருளாசை, குரோதம், பொறாமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல், அவதூறு, தேவப்பகை, துராகிருதம், அகந்தை, வீம்பு, பொல்லாதவைகளை யோசிப்பது பெற்றாருக்குக் கீழ்ப்படியாதது, உணர்வில்லாதது, உடன்படிக்கையை மீறுவது, சுபாவ அன்பில்லாதது, இணங்காதது, இறக்கமில்லாதது என்று 23-ஐ தொட்டுவிட்டது. இதிலே வேடிக்கை என்னவென்றால், அவைகளைத் தாங்களே செய்கிறதுமில்லாமல் அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள் (ரோமர் 1:32). கேடான சிந்தையின் ஆட்டம் எப்படி ?

அன்பானவர்களே! நாம் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாய் இருக்கிறோம்? தகாதவைகளை நடப்பிக்கும் கேடான சிந்தையுடையவர்களாக இருக்கிறோமா? அல்லது பிலிப்பியர் 2:5-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி, கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாக இருக்கிறோமா? சொல்லுங்கள், கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாக நாம் இருப்போமேயானால் தகாதவைகளை நடப்பிக்க நாம் துணிகரங் கொள்ள மாட்டோம். இயேசு, ஆண்டவர் நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34) என்று சொன்னது போல, பிதாவின் சித்தத்திற்கு நம்மைச் சமூலமாக ஒப்புக்கொடுக்கிறவர்களாக இருப்போம்.

தேவச் சித்தங்களில் ஒன்று, எல்லாரும் இரட்சிக்கப்படுவதும் எல்லாரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைவதும் (1 தீமோ.2:4) அப்படியானால், நாம் புதிய ஏற்பாட்டு சத்தியத்தின்படி அதாவது, கிறிஸ்துவின் உபதேசப்படி இரட்சிப்படைந்து விட்டோமோ? மறுபடியும் சொல்லுகிறேன், இரட்சிப்பு கிறிஸ்துவின் உபதேசப்படி இருக்க வேண்டும். அப்படி ஒருவன் எப்படி இரட்சிக்கப்பட வேண்டுமென்பது குறித்து, சபை சரித்திர நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் நாம் காண முடியு ம். அந்நூலில் இடம் பெற்றுள்ள மனமாற்றச் சம்பவங்களைப் படித்து, அவைகளிலுள்ள இரட்சிப்பின் படிகளைத் தொகுத்து, அதனடிப்படையில் நமது இரட்சிப்பை அமைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் தமது சபையிலே சேர்க்கிறார் (அப்.2:47). இப்படிக் கர்த்தரின் சபையில் அவரால் சேர்க்கப்பட்டு இறுதிவரை ராஜ்ஜியமாகிய சபையில் நிலைத்திருப்போமானால் பரலோக பாக்கியத்தை நிச்சயமாகவே பெற்றுக்கொள்வோம் (1 கொரி.15:24).

இப்படிப்பட்ட ஆசீர்வாதம் நம் ஒவ்வொருவருக்கும்
கிடைப்பதாக. ஆமென் ! ஆமென் !!

# கெட்ட ஆவிகளைத் துரத்துதல்

Bro. J.C. சோட்

**பே**ய், பிசாசு அல்லது கெட்ட ஆவிகள் மனிதனைப் பிடிக்கின்றன என நம்பும் பலர் இன்றைய உலகில் உள்ளனர். இந்த கெட்ட ஆவிகள் மக்களின் அனுமதியின்றியே அவர்களுக்குள் நுழைந்து, அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளுவதாகவும் நம்புகின்றனர். இறுதியாக, இந்த கெட்ட ஆவிகளைத் துறத்த, கிறிஸ்துவின் ஊழியரான ஒருவரால் மட்டுமே முடியும் என அவர்கள் மேலும் நம்புகின்றனர். ஆனால் வேதாகமம் இவ்வாறு கற்பிக்கிறதா?

கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் காலங்களிலும் பிசாசு பிடித்துக் கொள்ளும் சம்பவங்கள் பல நடந்து வந்தன என நாம் அறிவோம். பல வேளைகளில், கிறிஸ்துவே கெட்ட ஆவிகளைத் துறத்தினார். உதாரணமாக, இப்படிப்பட்ட ஒரு ஆவியை இயேசு துரத்துவதைப் பற்றிய செய்தியை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம். அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அவர்கள் படகிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும் சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போடுவான். அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும், பகலும் மலைகளிலும், கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இயேசுவை தூரத்தில் கண்டபோது, ஓடி வந்து, அவரைப் பணிந்து கொண்டு இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப் படுத்தாதபடிக்குத் தேவன் பேரில் உமக்கு ஆணை என்று மிகுந்தச் சத்தமிட்டுச் சொன்னான். ஏனெனில் அவர் அவனை நோக்கி: அசுத்த ஆவியே, இந்த மனிதனை விட்டுப் புறப்பட்டு போ என்று சொல்லியிருந்தார். அப்பொழுது அவர் அவனை நோக்கி உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன் நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். அப்பொழுது,

அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுக்குள்ளே போகும்படி அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக்கொண்டன. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து கடலில் அமிழ்ந்து மாண்டது. பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரம் தரித்து உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள். பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள். அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். அப்படியே அவர் படகில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன் அவரோடே கூட இருக்கும்படி தனக்கு உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக் கொண்டான். இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல், நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத் தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள் (மாற்கு 5 :1-20).

இயேசு, கெட்ட ஆவிகளைத் துரத்திய பல சம்பவங்களில் இதுவும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருந்தபடியால் அவர்களும் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையைப் பெற்றிருந்தனர் (மாற்கு 16:17). அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை யாருக்கெல்லாம் அளித்தார்களோ அவர்களும் கெட்ட ஆவிகளைத் துரத்தக் கூடியவர்களாக இருந்தனர். உதாரணமாக, சமாரிய மக்களுக்குப் போதிக்க பிலிப்பு சென்றபோது, பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால், சொல்லப்பட்டவைகளை, ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந்திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள் என வசனம் கூறுகிறது (அப்.8:6இ7).

கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் வாழ்ந்த காலத்தில் தேவன், பிசாசிற்குக் கொஞ்சம் தனிப்பட்ட சுதந்திரம்

அளித்திருந்தார் என்பதை நாம் காணமுடிகிறது. கிறிஸ்து, அவருடைய அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தனரோ அவர்கள் வந்து பிசாசை விரட்டும் வரை சில மக்களைப் பிடிக்க தேவன் பிசாசுகளுக்கு அனுமதியளித்திருந்தார். கர்த்தர், சாத்தான் பேரில் அதிகாரமுடையவராக இருந்தார் என்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது. ஆனால், பெயல்செபூலினாலே கிறிஸ்து சாத்தானை விரட்டுவதாக சிலர் அவரைக் குற்றஞ்சாட்டினார். வசனம் கூறுகிறது, ''அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமான ஒருவன் பேசவும், காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு தாவீதின் குமாரன் இவர் தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துறத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி, தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாயப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை மற்றும் செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைத்து நிற்கும்? நான் பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துறத்தினால் உங்கள் பிள்ளைகள் அவைகளை யாரோலே துறத்துகிறார்கள்? ஆகையால் அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துறத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறியடிக்கிறான் என்றார் (மத்தேயு 12:22-30).

உண்மையென்னவென்றால், தேவனுடைய வல்லமையால் இயேசு பிசாசுகளைத் துறத்தினார்; அதுபோலவே, அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் பிசாசுகளைத் துறத்தினர். சாத்தானைத் கொண்டு அவர்கள் துரத்துவதாக இருந்தால், நிச்சயமாக அவர்கள் சாத்தானை துரத்தியிருக்க மாட்டார்கள். பிறகு, அப்போஸ்தலர்களும், அவர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரணமடைந்ததும் அற்புதங்களைச் செய்யும்காலம் முடிவற்றுப் போனதால், அதன்பின்பு, பிசாசு மனிதனைப் பிடிக்கவும் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக அவர்களைக் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கப்படவில்லை. அதாவது, கிறிஸ்து, மற்றும் அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்ததைப் போல, மக்களுக்குள் பிசாசு, பேய், கெட்ட ஆவிகள்

பிடிக்கிறது என்று சொல்லுவோரும், பிசாசுகளைத் துறத்தும் வல்லமை தங்களுக்கு உண்டு என்று கூறுவோரும் உள்ளனர். ஆனால், யார் இந்த மக்கள்? இவர்கள் வேதாகமத்தில் சொல்லப்படாத மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.

கர்த்தருடைய சபையில் அங்கத்தினராக் கூட இல்லாத போதகர்கள் இவர்கள். கர்த்தரின் நாமத்தை இவர்கள் தரித்திருப்பதில்லை. வேதாகமத்திற்கு மாறான காரியங்களை இவர்கள் போதித்து வருகின்றனர். வேறுவிதமாகச் சொன்னால் அவர்களுடைய சகல செயல்பாடுகளும், அவர்கள் சாத்தானைச் சார்ந்தவர்கள் என்பதையேச் சுட்டிக் காட்டுகின்றன. கிறிஸ்துவின் காலத்திலும், அப்போஸ்தலர்கள் காலத்திலும் இருந்ததைப் போல இன்று மக்களைப் பிசாசு பிடிப்பதில்லை. பெரும்பாலான மக்களிடத்தில் பிசாசு குடியிருக்கிறான்; ஆனால், அவர்களுடைய அனுமதி இல்லாமல் அவர்களுக்குள் அவன் வருவதில்லை. அவனுக்கு வரவேற்பு அளித்து அவனைத் தங்க அனுமதித்து, துன்மார்க்கமான காரியங்களைச் செய்ய அவன் செல்வாக்கை நாடுவோரிடம் அவன் வசிக்கிறான். மேலுமாக, எப்போது அவர்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தேர்ந்தெடுக்கின்றனரோ அப்போது பிசாசை அவர்களாலே உதறித்தள்ளி விட முடியும்.

தேவனுடைய வார்த்தையை அறியாதவர்களும், கள்ளப்போதகர்களால் ஏமாற்றப்பட்டவர்களும், மக்களின் விருப்பத்திற்கு மாறாக பிசாசு அவர்களைப் பிடிக்கக் கூடும் என நம்பவைக்கப்படுகின்றனர். சில சமயங்களில் சில நோயாளிகளும், கெட்ட ஆவியால் பிடிக்கபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், இது உண்மையல்ல. மக்களின் அறியாமை, மூடப்பழக்கம் ஆகியவற்றை மூலதனமாக்கி அவர்களைப் பிசாசுகள் பிடித்துள்ளன என நம்பவைத்து, அவற்றைத் துரத்த ஜெபம் செய்ய வேண்டுமானால் ஒரு கணிசமான காணிக்கை தேவை என்பதைச் சொல்லி அப்பாவி மக்களிடம் பணத்தைக் கறந்துவிடும் கள்ளப் போதகர்களும், மதத்தலைவர்களும் இன்று பரவலாக உலா வருகின்றனர். குறிப்பாக, உலகின் எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நிறைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. நாம் பிசாசிற்கும், அவனுடைய சகல தீய வழிகளுக்கும், சக்திக்கும் அஞ்ச வேண்டும். ஆனால், அவனை நாமாக அனுமதித்தால் ஒழிய நமது வாழ்வில் அவனாக வர இயலாது. மீண்டுமாக, கர்ததரை விசுவாசித்து நமது பாவங்களிலிருந்து, மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, நமது பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறும்போது, நாம் அவனை விட்டு விட முடியும். அவ்வேளையில், சாத்தான் நம்மைவிட்டு விலகிப் போகிறான். அந்த வெற்றிடத்தில், நமது வாழ்வின் கர்த்தராக கிறிஸ்துவை நாம் அங்கே ஏற்றி வைக்கிறோம். ★

பெண்கள் பகுதி

# ஆண்கள் தலைமைக்கும், பெண்கள் அவர்கள் துணைக்கும்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**ஒ**ரு ஆண் பிள்ளைக்கு, அவனுடைய இளம் பருவத்திற்கான காரியங்கள் மற்றும் பண விஷயங்களில் அவன் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி போதிப்பதைக் காட்டிலும், அவன் வளரும்போதே, தேவ மனிதனுக்கேற்ற பண்புகளைப் பெற்றுக்கொள்ளும்படி போதிப்பது முக்கியமானது.

அதாவது, தன்னுடைய குடும்பத்திற்கு அவன் அன்பான ஒரு தலைவனாக இருப்பது பற்றியும், தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்குமிடையே, பொறுப்புள்ளவனாக நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கும், உலகத்திற்கும் இடையே நிற்க வேண்டியது பற்றியும், குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பது பற்றியும், குடும்பம் எடுக்கும் முடிவுகளுக்குப் தேவனுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் பற்றியும் போதிக்க வேண்டும்.

ஆண்களோடு போட்டியிடும் வண்ணம், இன்றைய பெண் பிள்ளைகளின் பொதுவான வளர்ப்பும், பயிற்சியும் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்பினால், பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவருடன் பிரச்சினையைச் சந்திக்க நேரிடுகிறது. திருமண உறவுக்குள் தன்னை உட்படுத்தும் வேளைக்காக ஆயத்தப்படுத்தவும், தன்னை தெரிந்துகொண்ட (அல்லது தான் தெரிந்துகொண்ட) கணவரின் வாழ்க்கை முழுமையாகச் செய்யவும், தன் குடும்பத்தின் மேல் அன்புள்ளவளாக, கரிசனையுள்ளவளாக இருக்கவும், தேவன் தன் கணவனைத் தன்னுடைய நலனுக்காகவே உண்டாக்கியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணிடம் தேவன் எதிர்பார்க்கிறார். நிச்சயமாகவே, தன் கணவனுக்குச் சிறந்த துணையாக அமையவும், தன் பிள்ளைகளைச் சிறப்பாக வளர்க்கவும் அவள் தன் மனதைத் தரமான விசுவாசத்துடன் வளர்க்க வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, எளிமையான இல்லத்தரசியாகவும், தாயாகவும், மனைவியாகவும் இருப்பதில்

ஆர்வமின்மையால், பெண்கள் இக்காரியத்தைக் குறித்து பெரிதாகக் கவலைப்படுகி றார்கள். இது ஒரு சோகமான, ஆர்வம் காட்ட முடியாத வேலை என்ற கருத்து நிலவுவதினால் அநேகத் தாய்மார்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பலிருந்து தப்பித்துக் கொண்டு அலுவலகங்களில் வேலை பார்க்கும் உற்சாகத்தை அடைய கொஞ்சமும் தாமதிப்பதில்லை. இப்படிப்பட்ட மனோபாவங்கள் அதிகமாய்க் கற்றுக் கொடுக்கப்பட்டவை – நமது கலாச்சாரம், ஒன்றுக்கும் உதவாதவர்களும், அடக்கப்பட்டவர்களும் தான் வீட்டிலிருப்பார்கள் என்றும், தாலந்துள்ளவர்கள் உலகத்தில் போட்டிபோட்டுக்கொண்டு தங்களுக்கென்று நல்லதொரு எதிர்காலத்தை உண்டாக்கி, அதிகமாய்ச் சம்பாதிப்பார்கள் என்றும் மீண்டும் சொல்லிக் கொடுக்கிறது.

கடந்த தலைமுறையில் தாய்மைத்துவம் என்பது பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந்தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்த்தார்கள். தங்கள் திறமைகளைக் குடும்பத்திற்காகப் பயன்படுத்துவதைக் கௌரவமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப்படைந்தவர்களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார்களோ அதிலேயும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றி கற்ப்பிக்கப் பட்டிருந்தார்கள்.

### I. அவர்கள் என்ன கேட்கிறார்கள் அல்லது எதைப் பார்க்கிறார்கள்?

நாம் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்? நம் குழந்தைகள் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்?

**வாயின் வார்த்தைகளினால் :** அன்றாடம், பெற்றோராகிய நாம் நம் பிள்ளைகள் வெற்றியுள்ள வாலிபர்களாக வருவதற்கு நம் வாயின் வார்த்தைகள் அவர்களை ஊக்கப்படுத்தும் படியாக இருக்க வேண்டும்.

**வாழ்க்கையினால் :** நாம் வார்த்தைகளைத் தொடர்ந்து பேசாமல் இப்பொன்றும் பிறகொன் றுமாக பேசுகிறோம். ஆனால், நாம் ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தானாகவே, நம் பிள்ளைகள் நம்மிடமிருந்து எதைக் கேட்கிறார்களோ அதை விட நம்மிடமிருந்து எதைப் பார்க்கிறார்களோ அதையே பலமடங்கு அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இதுதான் உண்மையான மனோநிலை.

ஒரு பெண் ஓயாமல் தன் கணவனுடன் வாக்குவாதம் செய்துகொண்டு, அவனுடைய தலைமைத் துவத்துக்குச் சவால் விட்டுக் கொண்டு இருக்கும் போது, தன்னுடைய பெண் பிள்ளைகள் அவர்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை மதிக்கச்சொல்லி கற்றுக்கொடுக்கும் போது அவள் முழு வெற்றியையும் அடைந்துவிட முடியாது. அதைப்போலவே, தன் மனைவியை அற்பமாய் எண்ணுகிற ஒரு கணவன் அல்லது திடசித்தமில்லாமல் பெண்களால் ஆளப்படும் ஒரு கணவன் தன் ஆண் மக்கள் அவர்களுடைய மனைவிகளில், கிறிஸ்து சபையில் அன்பு கூர்வது போல அன்பு கூறவேண்டுமென்று கற்றுத்தர முடியாது. அத்தோடு தன் மகன்களை ஒரு பொறுப்புள்ள, தலைமையேற்று நடத்தக் கூடிய பண்புள்ளவர்களாக உருவாக்க முடியாது.

சந்தேகத்திற்கிடமின்றி, நம்முடைய பிள்ளைகள் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியதான அணுகு முறைகளை நம்மைப் பார்த்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஆகையால், நாம் கற்றுக்கொடுக்ககூடிய விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

## II. அதிகாரம், உண்மையாகவே யாரிடத்திலிருந்து வருகிறது?

ஆண், பெண், பெற்றோர் என்ற நம்முடைய பின்னிப்பிணைந்த இந்த உறவில், அதிகாரங்களை நாம் யாரிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம்? தலைமை யேற்று நடத்துவது, கீழ்ப்படிந்து போவது என்பதெல்லாம் சாதாரணமாக வழக்கத்தில் உள்ள ஒன்று, மற்றபடி இதில் ஏதும் விசேஷம் இல்லை யென்று மக்கள் அநேக சமயங்களில் நினைத்து விடுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கேயுள்ள பலத்தால் பெண்களை ஆளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. பெண்களும் தங்கள் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மிகவும் அற்பமாய் சுய நலமாயும் ஆண்களால் நடத்தப்படுகிறார்கள் என்ற எண்ணம் இருந்து வந்தது.

இன்றைய நாட்களில் அநேக குழந்தைகள் எந்த விதமான அதிகாரங்களையும் மதிப்பதில்லை. தங்களைக் கண்டிக்கிறவர்களிடம் ஒருவிதமாக ஆத்திரத்துடனும், கீழ்ப்படிய மனமில்லாமலும் கூடிய முகத்தை வைத்துக் கொண்டும் உள்ளனர். உதாரணமாக, பெற்றோர், ஆசிரியர், அதிகாரிகள் அரசாங்கம் போன்றோரிடம் இவ்வாறு நடந்து வருகிறார்கள்.

அதிகாரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர்கள் எல்லா மனித இனத்திற்கும், மனித இனம் சம்பந்தப்பட்டவைகளுக்கும் சர்வ அதிகாரி. ஆண் குடும்பத்திற்கு தலையானவன் என்று அவர் சொல்லும்போது, அந்தத் தகுதியான வேலைக்கு அவனை நியமித்தார் என்பதை சிருஷ்டிகர் என்ற அதிகாரத்தால் அவர் அவ்வாறு கூறுகிறார். ஆணுக்குத் துணையான பெண்ணை உருவாக்கி, வாழ்க்கையில் அவளுடைய பங்குகளை நியமிக்கும் போது, மீண்டும் சிருஷ்டிகர் என்ற அதே அதிகாரத்தில் தான் அவ்வாறு செய்கிறார். எந்த ஒரு மனிதனும் தேவனுடைய அதிகாரம் அவருடைய கட்டளை, அவருடைய ஒழுங்கு முறை மீது சவால் விட்டு பெற்றுவிட முடியாது.

இந்தப் பொறுப்பை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ள மறுக்கும் போது, குற்றம் சாட்டுகின்ற மகிழ்ச்சியில்லாத மனைவியோடு வேண்டா வெறுப்பாகவாழ வேண்டுவரும். தேவன் தன்னுடைய அதிகாரத்தால் சொன்ன கட்டளைக்கு இவன் கீழ்ப்படியாததுதான் இந்த எதிர்ப்புக்குக் காரணம். தங்கள் கணவன்மார்களின் தலைமைத்துவத்தை ஏற்காத பெண்களுக்கும் இதேநிலை தான். தேவனோடு அவள் போர் செய்கிறவளாகக் காணப்படுவாள்.

இந்த உண்மையை ஆண்களும், பெண்களும் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது அவசியம். நான் உனக்கு சொல்கிறேன் நீ இதை செய் என்று பெற்றோர் பிள்ளைகளிடத்தில் சொல்லக்கூடாது. அதே, நேரத்தில், தாங்கள் பெற்றோராய் இருப்பதால், பிள்ளைகளுக்காகத் தேவனுக்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதால், நாங்கள் அப்படி செய்கிறோம் என்பதை வலியுறுத்த வேண்டும். இப்படிச் செய்வது அவர்களிடையேயுள்ள பெற்றோருக்கு விரோதமாக எழும்பும் ஆத்திர குணம், உதாசினப்படுத்துதல் ஆகிய தன்மைகளைக் களைந்தெறியச் செய்ய உதவும். அத்தோடு கூட தேவனுடைய அதிகாரத்திற்கு அவர்கள் தங்களை தகுதிப்படுத்த அது பிரயோஜனமாயிருக்கும்.

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடிப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணு வாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே,**

நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே. 6:1-4) பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பரியமானது (கொலோ. 3:20).

பிள்ளையானவன், தங்கள் பெற்றோர் தேவனுடைய அதிகாரத்தின் கீழே கொடுக்கப்பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணர வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருதல், பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், இப்படியே ஒவ்வொரு காரியங்களுக்கும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தங்கள் சொந்த இஷ்டப்படி அதிகாரம் செலுத்தவே கூடாது. பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமாக எப்படி தேவ சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமோ அதேபோல் பிள்ளைகளும் பெற்றோருக்காக அல்லாமல் தேவனுக்காக அப்படிச் செய்ய வேண்டும்.

மனித உறவு என்ற சொத்துக்களை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்புவதென்பது பயத்துடனும், பொறுப்புடனும் செய்யப்படக் கூடிய வேலையாகும். குடும்பத்தலைவனாய் இருப்பதால் ஒரு கணவனுக்கு இதில் பங்குண்டு. ஆனால், மனைவியானவள் வீட்டிலிருந்து கொண்டு தன் பிள்ளைகளைப் போஷிக்கும் தனி சிலாக்கியம் பெற்றிருப்பதால், அவள் கணவனைக் காட்டிலும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்றுத்தர முடியும். இவைகளை நாம் பிடித்துக் கொள்ளும் படியாக, நம் வாழ்க்கையில் கிடைத்த தேவசித்தமாகும். இவைகளின்படி செய்கிற குடும்பங்கள் பாக்கியமுள்ளவைகள். ★

## நம்முடைய கொடுத்தல் எந்த வகை?

1. விருப்பத்தோடு கொடுத்தவர் - ஆபிரகாம் (ஆதி 2௪:1-19).

2. குறைச்சலிலும் மிக அதிகமாகக் கொடுத்தவர் - ஏழை விதவை (மாற்கு 12:44).

3. கஞ்சத்தனமாகக் கொடுத்தவர் - (சவுல் சாமுவேல் 15:7-83).

4. தியாகமாகக் கொடுத்தவர் - தாவீது (சாமுவேல் 24:௪4).

5. தானாய் முன்வந்து கொடுத்தவர் - சகேயு (லுக்கா 19:1-10)

வாலிபர் பகுதி

# வசனமே வழி

சகோ. பென்னி மார்ட்டீன்

**உ**ங்கள் யாவருக்கும் வல்லவராம் யேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வாலிப வயது வழிதவறிப் போகிற வயது, விளைவுகளைப் பற்றி விவாதிக்காமல் விரைந்து சென்று செயலாற்றுகிற வயது. இன்று உலகத்தில் நாம் பார்க்கும்போது வன்முறை மற்றும் பெருங்குற்றங்களில் வாலிபர்களின் பங்கு அதிகமாக இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வாலிபர்கள் வளர்க்கப்பட்ட விதம் குடும்பப் பின்னணி போன்றவைகள் அவர்கள் குற்றங்களில் ஈடுபடுவதற்குக் காரணிகளாக அமைவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், அது ஓரளவுக்குத் தான் உண்மை. ஏனென்றால், சிறுவயதில் நன்றாக வளர்க்கப்பட்டவர்களும், நல்ல குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர்களும் சில சந்தர்ப்பங்களில் மிக மோசமான காரியங்ளில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறேம். எனவே, வாலிபர்களைப் பாவம் செய்யாதபடி முழுமையாகத் தடுப்பது வளர்ப்போ அல்லது குடும்பப் பின்னணியோ அல்ல. மாறாக தேவனுடைய வார்த்தை மட்டுமே வாலிபர்களைப் பாவ வழியில் விழுந்து போகாதபடிக்குப் பாதுகாக்கிறது.

பிரியமானவர்களே! இக்கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் போது, உங்களில் சிலர் என்னுடைய இந்த மோசமான சூழ்நிலைக்குக் காரணம் என் குடும்பப் பிண்ணனி மட்டும் தான் என்று நினைத்தால், அந்தத் தவறான எண்ணத்தை உங்கள் மனமெனும் நந்தவனத்திலிருந்து வேரறுத்துப் போடுங்கள். ஏனென்றால், இதுவே உங்கள் வளர்ச்சியை ஓரளவிற்காகிலும் தடுக்கும் ஒரு களையாக முளைத்து விடும். தேவனுடைய வார்த்தை என்னும் விதையானது, நம் இருதயமாகிய நிலத்தில் விதைக்கப்பட்டால் அது வளர்ந்து, நம் வளமான வாழ்விற்கு வழி கோலும். சுருக்கமாகச் சொல்லப்போனால், தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்து வைத்தால், நாம் பாவம் செய்யாதபடிக்கு அது நம்மைப் பாதுகாக்கும் [சங்.119:11]. இப்போது தேவனுடைய வார்த்தை நம்மை வாழ்க்கையின் எந்தெந்த நிலைகளில் எல்லாம் பலப்படுத்துகிறது என்பதைக்

**I. எல்லாம் முடிந்து விட்டது என்ற நிலையில்** [சங்.119:25]

நம் எல்லோருக்கும் வாழ்க்கையில் எல்லாமே முடிந்து

விட்டது. இனி அவ்வளவுதான் என்கிற நிலை ஒரு கட்டத்தில் ஏற்படுகிறது. சங்கீதகாரனுக்கும் இது போன்ற ஒரு நிலை ஏற்படுகிறது. மண்ணைக் கவ்வுகிற ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறார். அப்போது, அவர் தேவனுடைய வசனத்தின்படி தான் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். தேவனுடைய வார்த்தை மட்டுமே விழுந்து கிடக்கின்ற நம்மை உயிர்ப்பிக்கும் வல்லமை பெற்றிருக்கிறது. சங்கீதம் 119–ல் தேவனுடைய வார்த்தை மிக நேர்த்தியான முறையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்திலேயே மிக நீளமான அதிகாரத்தைக் கொண்டது இந்த 119 ஆம் சங்கீதம் தான். இந்த அதிகாரத்தில் தேவனுடைய வார்த்தை கட்டளை, பிரமாணம், வேதம், சாட்சி போன்ற பல்வேறுபட்ட வார்த்தைகளால் விவரிக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே! நமக்குப் பெலன் தேவைப்படும்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகிறோமோ? நாம் பெலனற்றுப் போகும்போது தேவனுடைய வார்த்தை மட்டுமே நம்மை எடுத்து நிறுத்தும் [119:28]. பெரும்பாலான வேலைகளில் நாம் பெலனற்றுப் போகும் போது , நம் உறவினர்களிடம், நண்பர்களிடம் திரும்புகிறோம். அவர்கள் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப்போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இதே அதிகாரத்தில் 92ஆம் வசனத்தில் **சங்கீதக்காரன் வேதம் என் மன மகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன் என்று சொல்கிறார்.** இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே முடியாது. நாம் எந்தக் கேள்விக்கு விடை தேடுகிறோமோ அதற்கான விடை தேவனுடைய வார்த்தையில்தான் உள்ளது. உலகில் வேறெங்கும் இல்லை. எனவே தான், வாழ்க்கையே வெறுத்துவிட்டது, கசந்து விட்டது என்கிற நிலைக்குத் தள்ளப்படும்போது, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டு பெலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**II. சஞ்சலத்தால் நாம் கரைந்து விட்டோம் என்ற நிலையில்** [சங்.119:28]

சஞ்சலம் என்கிற வார்த்தையை நாம் கேட்கும்போதே நம் இருதயம் சஞ்சலப்படுகிறது. அவ்வார்த்தையை நாம் காதுகொடுத்து கேட்கவே விரும்புவதில்லை. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது அழையா விருந்தாளியாக வந்து நம்மை அலக்கழிக்கிறது. அப்படிப்பட்ட கசப்பான வேளைகளில் தேவனுடைய வார்த்தையை நாம் உட்கொள்ளும்போது நம் வாழ்க்கையை அது இனிமையாக்குகிறது. சங்கீதக்காரன் சங். 119:103 ல் உம்முடைய வார்த்தைகள் என் காதுக்கு இனிமையானவைகள் என்று சொல்லவில்லை.

மாறாக, உம் வார்த்தைகள் என் நாவுக்கும், வாய்க்கும் இனிமையானவைகள் என்று சொல்கிறார். அப்படியென்றால், வார்த்தைகளை நாம் ருசிக்க முடியுமா? அவைகளை நாம் உட்கொள்ள முடியும். ஆம், நம் உள்ளார்ந்த மனுஷனால் முடியுமா. தேவனுடைய வார்த்தை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. நாம் ஆவிக்குரிய பிரகாரமாக பசியுள்ளவர்களாயிருந்தால் தேவனுடைய வார்த்தைகளை உட்கொள்ள முடியும்.

தேவனுடைய வார்த்தையை ருசித்து, அதன் இனிமையை ரசித்தவர்கள் வாழ்க்கையில் ஏற்படுகிற கசப்பை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார்கள். இன்று அநேக வாலிபர்கள் சஞ்சலம் ஏற்படும்போது நண்பர்களின் ஆலோசனைகளை, உறவினர்களின் அறிவுரைகளை நாடுகிறார்கள். இன்னும் சிலர் உலகத்தின் தத்துவ ஞானங்களுக்கும், பொன்மொழிகளுக்கும் செவிகொடுக்கிறார்கள். ஆனால், அவைகளால் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறார்களா? இல்லை. ஒரு பிரச்சனைக்காகப் போய் ஒன்பது பிரச்சனைகளை வாரிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தேவனுடைய சாட்சிகள் (வசனங்கள்) நமக்கு இன்பமும் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது என்று சங்.119:24-ல் நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை நாம் தியானித்து வாசிக்கும் போது, தேவன் நம்மோடு தம்முடைய வார்த்தைகளில் பேசுகிறார் என்று உணர்ந்து கொள்ள முடியும். பிரியமானவர்களே, தேவன் யாரிடமும் நேரடியாகப் பேசுவதில்லை என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே, சஞ்சலம் வந்து நம்மைத் தாக்கும் போது, நாம் துன்பத்தில் துவண்டு போகாதபடி, இனிய தேவனுடைய வார்த்தையைத் தேடி உட்கொண்டால், அதைக் கடைபிடித்தால் கசப்பான அனுபவங்கள் நம்மை விட்டு அகன்று போய் இனிய தருணங்கள் நம்மைப் பின் தொடரும். மேலும், உங்கள் வாழ்க்கையை வளமாக்க தேவனுடைய வார்த்தை என்னும் பொக்கிஷத்தை உங்கள் இருதயங்களில் சேர்த்து வைத்தால், வைத்து வைத்தால் இவ்வுலகில் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு நம்மைக் காப்பது மட்டுமின்றி, அது பரலோகத்தில் நமக்கு ஓர் இடத்தையும் நிச்சயப்படுத்தும் என்பதை நாம் அறியும் போது நம் உள்ளம் பரவசம் அடைகிறது. தேவனுடைய வார்த்தை நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் போதுமானதாகவும், நமக்குப் பெலனைத் தருவதாகவும் இருக்கிறது. அந்த வார்த்தைகளை தியானித்துப் படிப்பதை நாம் பழக்கமாக்கிக் கொண்டால், பரலோக பாக்கியத்தைப் பற்றிக் கொள்வோம். தேவன் தாமே உங்களை அபரிதமாக ஆசீர்வதிப் பாராக! ஆமென். ★

சிறுவர் பகுதி

# தேவனைச் சார்ந்திருப்பது

Bro. ஏபில் நாயகம்

பிரியமான சிறு தம்பி தங்கைகளே! எப்படி இருக்கீங்க எல்லாரும்? கோடை விடுமுறையை மகிழ்ச்சியாக கழித்துக் கொண்டிருக்கிறீர்களா? அருமை இரட்சகர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். VBS - க்கு சென்று புது பாடல்கள், புது கதைகளை கற்றுக் கொண்டீர்களா? மிக்க மகிழ்ச்சி! ஆம் குழந்தைகளே! இந்த சிறு வயதிலிருந்தே நமக்குக் கிடைக்கிற நேரத்தில் ஒரு பகுதியை தேவனுடைய காரியங்களுக்குக் கொடுப்பது நமக்கு நிச்சயம் ஆசீர்வாதத்தைத் தரும். சரி, இந்த மாதம் சிறுவர் பகுதியிலிருந்து என்ன பாடம் கற்றுக் கொள்ளப் போகிறோம் என்று பார்க்கலாமா?

இராஜாக்கள் புத்தகத்தில் 18–20 அதிகாரங்களில் **எசேக்கியா** என்ற யூதாவின் ராஜாவைப் பற்றி வாசிக்கமுடியும். அந்த மனிதன் இருபத்தைந்து வயதிலே ராஜாவானான். அவன் தகப்பன் பெயர் ஆகாஸ். அவன் தாயின் பெயர் ஆபி. இந்த ராஜா தேவனுக்குப் பிரியமான ஒருவனாக இருந்தான். தேவன் இந்த ராஜா செய்த எல்லாக் காரியங்களையும் ஆசீர்வதித்தார். ஒரு சமயம், அசீரியா நாட்டு ராஜாவாகிய சனிகெரிப் என்பவன் யூதா நாட்டை அடிமைப்படுத்த வேண்டும் என்று நினைத்து எசேக்கியா ராஜாவை போரிட அழைத்தான். எசேக்கியா ராஜாவுக்கு ஒரு கடுமையான சூழ்நிலை. அசீரியா நாட்டின் படைகள் மிகவும் பலம் வாய்ந்தது. அதை எப்படி வீழ்த்த முடியும் என்ற கவலை எசேக்கியா ராஜாவுக்கு இருந்தது. அந்த நேரத்தில் எசேக்கியா ராஜா தேவாலயத்திற்குச் சென்று ஜெபித்தான். ஆம் குழந்தைகளே! கஷ்டமான நேரம் என்று வந்தபோது அவன் **முதலாவது** தேவனிடம் தன் கஷ்டங்களைச் சொல்லி ஜெபித்தான். தேவன் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, தம்முடைய தூதனை அனுப்பி அசிரிய போர் வீரர்கள் 1 லட்சத்து 85 ஆயிரம் பேரை கொன்று போட்டார். அதன் பின் அசீரியா ராஜா, எசேக்கியா ராஜாவை தொந்தரவு செய்யாமல் தன் தேசத்திற்கே திரும்பிச் சென்று விட்டான்.

பிள்ளைகளே! பார்த்தீர்களா? நம் தேவன் எவ்வளவு நல்லவர் என்று! தம்மை நம்பி ஜெபித்த எசேக்கியா ராஜாவிற்கு பெரிய நன்மையைச் செய்தார். நாம் எசேக்கியா ராஜாவிடமிருந்து என்ன பாடத்தைக் கற்றுக் கொள்ள முடியும்? முதலாவது, நமக்கு கஷ்டங்கள் வந்தால் அதை தேவனிடம் தெரியபடுத்த வேண்டும். ஆம், நம் சுயபுத்தியின் மேல் சாந்திராமல் தேவன் மீது சார்ந்து இருக்க வேண்டும். இரண்டாவது, தேவன் மீது நாம் நம்பிக்கை வைத்தால் அவர் நம்மைப் பாதுகாத்துக் கொள்வார். நாம் அவரை நம்பியிருந்தால் நம்மை உயர்ந்த அடைக்கலத்திலே பாதுகாப்பாக வைத்துக்கொள்வார். எனவே, நமக்கு வரும் கஷ்டங்களில் கடினமான சூழ்நிலைகளில் நாம் தேவனை சார்ந்திருந்து அவரை நம்பியிருந்தால் தேவன் நிச்சயம் நம்மை பாதுகாத்துக் கொள்வார். சரியா? தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக! ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஜூன் மாத இதழில்)**

## (உபாகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

1. வணங்கா கழுத்துள்ள ஜனம் என்று தேவன் ஏன் சொன்னார்?
2. இஸ்ரவேலர் சகல ஜனங்களைப் பார்க்கிலும் எப்படியிருப்பார்கள்?
3. முந்தின பலகையை மோசே என்ன செய்தார்?
4. பிதாக்கள் எத்தனைபேராய் எகிப்துக்குப் போனார்கள்?
5. கர்த்தருடைய கையும், புயமும் எப்படிப்பட்டது?
6. எதை மாத்திரம் புசிக்கக்கூடாது?
7. எப்பொழுது விடுதலை பண்ண வேண்டும்?
8. நீ செய்யும் எல்லாவற்றிலும் உனக்கு கர்த்தர் என்ன செய்வார்?
9. வருஷத்தில் எத்தனை தரம் புளிப்பில்லா அப்பண்டிகை?
10. கர்த்தருடைய சந்நிதியில் எப்படி வரக்கூடாது ?

## ஏப்ரல் மாத வினாக்களுக்கான விடைகள்

1. அதிகாரம் 34, (வசனங்கள்.959)
2. ஆயிரம் மடங்கு (1:11)
3. ஏசா (2:5)
4. சீகோன் (2:30)
5. ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கம் (5:10)
6. எகிப்து (6:12)
7. ஏழு (7:1)
8. ரூபனியர் (4:42)
9. தேவன் பட்சிக்கிற அக்கினி,எரிச்சலுள்ள தேவன் (4:24)
10. பிஸ்கா (3:27)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| 1. N. இந்திரா ஜெபக்கனி | - தூத்துக்குடி |
| 2. M. செல்வம் | - கோவை |
| 3. R. பாக்கியம், ராஜேஷ் | - சென்னை |
| 4. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 5. N. ஜெபத்தாய் | - நாசரேத் |
| 6. செல்வமணி குணசேகரன் | - சென்னை |
| 7. S. ஜோதி சுரேஷ் | - திருச்சி |
| 8. A. பிலோமினா | - கோவை |
| 9. R. பாரதி | - கோபி |
| 10. K. ஜெயசிங் | - சென்னை |
| 11. K. இம்மானுவேல், ஈஸ்வரி | - பவானி |
| 12. J. ஜெமீலா செல்லையா | - நெல்லை |
| 13. S. ஜெயராஜ் | - கோவை |
| 14. ஜெயமணி ஜெயபாண்டியன் | - கடலூர் |
| 15. J. ஜான்சி | - ஆனைமலை |
| 16. மரகதம் திரவியம் | - தேனி |
| 17. G. சாமுவேல் மோகன்தாஸ் | - சென்னை |
| 18. V.C. ரூபவல்யா | - நாசரேத் |
| 19. T. சத்தியசீலன் | - கோவில் பட்டி |
| 20. G. பாக்கியம் சம்பூரணம் | - ஈரோடு |
| 21. J. மாலதி ஜெயக்குமார் | - மூலனூர் |
| 22. J. அபினேஷ் | - மூலனூர் |
| 23. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 24. S. ஆதாள் | - கோவில்பட்டி |
| 25. V.S.S. பால்ராஜ் | - மதுரை |
| 26. மாலதி ஜெயசெல்வம் | - சீர்காழி |
| 27. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 28. ஜெனி | - கோவை |
| 29. ஜெயஷீலா | - காரைக்கால் |
| 30. தெபோராஜ் ஸ்டீபன் | - சேலம் |
| 31.அருள்ராஜ் | - சென்னை |

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி:** கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் (அப்.2:21) என்று வேதாகமம் மிக எளிமையான முறையில் சொல்லும்போது இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமா?

**பதில்:** கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதும், ஞானஸ்நானம் பெறுவதும் தனித்தனியான செயல்கள் என்றே, மேலே கேட்கப்பட்ட கேள்வி யூகிக்கச் செய்கிறது. ஆனால், அது அப்படி அல்ல. மாறாக, கீழ்க்காணும் காரியங்களை வேதவசன ஆதாரத்துடன் ஆழ்ந்து சிந்தியுங்கள். கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வது மாதட்திரமே இரட்சிப்பை ஏற்படுத்தாது. ஏனெனில், பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத்7:21) என்று இயேசு தாமே அறிவித்திருக்கிறபடியால் தொழுதுகொள்ளுதல் என்பது வெறுமனே வாய்ரீதியான வேண்டுதலாக இராமல் அதைவிட மேலான செயல்களை உள்ளடக்கியது என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

அப்போஸ்தலர்கள் 2–ம் அதிகாரத்தில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் இரட்சிப்பை வாக்குத்தத்தம் பண்ணின அப்போஸ்தலன், இவ்விதமாகவும் கட்டளையிட்டார். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்.2:38). இதினிமித்தம் அப்.2:21–ல் உள்ள இரட்சிக்கப்படுவான் என்கிற சொற்றொடர் அப்.2:38–ல் உள்ள பாவமன்னிப்பின் செயலோடு தொடர்புடையதாக இருப்பதால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்பது மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தை உள்ளடக்கியதாகவே இருக்கிறது.

பாவமன்னிப்பைப் பெறும்பொருட்டு ஞானஸ்நானத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுக்கும் ஒருவர், கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார் என்பதை புதிய ஏற்பாட்டு அப்போஸ்தல உபதேசம் தெளிவாக்குகிறது. அப் 22:16–ல், மனந்திரும்பிய சவுலுக்கு அனனியா வலியுறுத்துவதைக் கவனியுங்கள். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றார். இதினிமித்தம் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பும் யாவரும் மீட்பின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெறவேண்டும். இதைத்தவிர வேறெந்த விழியிலும் யாரும் ஒரு போதும் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. ★

# சபை கூடுதலின் இலக்கணம்

Bro. பாண்டியன்

நமதாண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்து மற்றும் சமாதானம் உண்டாவதாக, இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் தேவனால் சேர்க்கப்பட்டார்கள் என்றும், அப்படி சபையில் சேர்க்கப்பட்டவர்கள் வாரந்தோறும். அப்பம் பிட்கும்படி கூடிவந்தார்கள் என்றும் நாம் அறிவோம். தேவனைத் தொழுது கொள்ள பழைய ஏற்பாட்டில் மிருக பலிகளும் புதிய – ஏற்பாட்டு சபையில் உதடுகளின் பலியாகிய ஸ்தோத்திர பலியையும் நாம் பயன்படுத்துகிறோம். ரோமர் 15:4–ன் படி முன்பு எழுதப்பட்டவைகள் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறபடியால் சபைகூடுதலை நாம் எப்படி அநுசரிக்க வேண்டும் என்பதற்கான போதனைகளை வேதத்திலிருந்து ஆராய்ந்து பார்ப்போம். மேலும், தேவனைத் தொழுதுகொள்ளும் சிலாக்கியம் பெற்றிருந்த இஸ்ரவேல் சபையார் எப்படியெல்லாம் அதைத் தவறாக அநுசரித்தார்கள் என்பதையும் நாம் வேதத்தில் காணலாம்.

ஆரம்பத்திலிருந்தே தேவனைத் தொழுதுகொள்ளுகிற விஷயத்தில் அவர்கள் இடறினார்கள். ஏசாயா புத்தகத்தில் அவர்களுடைய ஆராதனையில் இருக்கிற குறைபாட்டை தேவன் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். ஏசாயா 1:11–17 பகுதியில் நாம் வாசிக்கும்போது இச்செய்திகளை நாம் பார்க்கிறோம்.

இப்போது, நாம் புதிய ஏற்பாட்டு உபதேசங்கள் படி ஆராதனையில் ஐந்து முக்கிய அம்சங்களைக் கடைபிடிக்கிறோம். அவையாவன ஜெபம், பாடல், வேத ஆலோசனை, கர்த்தர் பந்தி மற்றும் காணிக்கை என்ற ஐந்து அம்சங்களை அடக்கியதே புதிய ஏற்பாட்டு ஆராதனையாகும். இந்த ஒவ்வொரு அம்சத்தையும் நாம் மேற்கோள் காட்டிய ஏசாயா புத்தகப் பகுதியில் இருப்பதைக் காணும்பொழுது தேவஞானம் வியப்பளிக்கிறது.இஸ்ரவேலர் பலிகளை தேவனுக்கு அதிகமாகச் செலுத்தி தன்னில்தானே திருப்தி கொண்டனர். ஆனால், உங்கள் பலிகளின் திரள் எனக்கு வீண் என்று சொல்லுகிறார். அது வெறுப்பாக உள்ளது எனவும், எனக்குப் பிரியமில்லை என்றும் வெளிப்படையாகச் சொல்லுகிறார். என் சந்நிதியில் வரும்போது என் பிரகாரங்களில் இப்படி வர யார் உங்களைக் கேட்டது என்று தேவன் கேட்டார் (ஏசா1:11,12).

எனக்கன்பானவர்களே! அங்கு பலிகள் என்று குறிப்பிட்டது நாம் கூடிவந்து தேவனை மகிமைப்படுத்தும் உதடுகளின் ஸ்தோத்திர பலியைக் குறிக்கும். நாம் சபை கூடி வரும்போது

தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்ற உணர்வில்லாமல் பாடினோமேயானால் அது தேவனுக்குப் பிரியமாய் இராது.

தேவனுடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை இயேசுவின் மூலமாய் தேவனுக்குச் செலுத்தக் கடவோம் என்பது அப்போஸ்தலர் கட்டளை (எபேசி 3:20,21, எபேசி 5:20, எபிரே 13:15). ஆதி சபையார் அப்போஸ்தலர் உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். தேவ சித்தப்படி செலுத்தப்படாத பலிகளை தேவன் வெறுத்து அவை எனக்குப் பிரியமல்ல என்கிறார். ஆனால், இன்றைய நாளில் ஜனங்கள் இசைக்கருவிகளை இரைச்சலிட்டு கைக்கொட்டி சத்தமிட்டு நாங்கள் தேவனை மகிமைப் படுத்துகிறோம் என்று சொல்லி சமுதாயத்தில் தேவ ஆராதனையை கேலிக்கூத்தாக மாற்றிவிட்டனர். ஆனால், தேவனுக்கு அது பிரியமல்ல என்று ஏசாயா மற்றும் ஆமோஸ் தீர்க்கதரிசிகளின் காலத்திலேயே வெளிப்படுத்திவிட்டார் (ஆமோஸ் 5:21 – 23).

அப்படியே இஸ்ரவேல் ஜனங்கள் நேரடியாக தேவனிடம் பலியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தனர். இஸ்ரவேல் அல்லாத ஜனம் தேவனிடம் ஜெபிக்க உரிமையில்லாதிருந்தார்கள். இன்றும் இயேசுவை சொந்த ரட்சகராக ஏற்காத ஜனங்களின் ஜெபம் கேட்கப்படாது. மேலும், இஸ்ரவேலரே, அக்கிரமத்தோடே தேவனிடம் ஜெபித்தபோது அவர்கள் ஜெபம் ஏற்படவில்லை. இன்று விசுவாசிகளாகிய நமக்கு இயேசுவின் நாமத்தில் தேவனிடம் ஜெபிக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், சத்தியத்தை அறியாத பலர், ஆண்டவர் இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்படியாமல் மரியாளிடத்திலும், அந்தோணியார் போன்ற சீஷர்களிடத்திலும், இயேசுவினிடத்திலும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் அவருடைய சித்தப்படி ஜெபிக்க இயேசுவின் நாமத்தில் பிதாவாகிய தேவனிடம் ஜெபிக்க போதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டது போல அக்கிரமத்தோடே, பாவங்களோடே நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தாலும் ஜெபம் கேட்கப்படாது. யோவான் முதலாம் நிருபத்தில் நாம் நம் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்று நம்மைச் சரிபடுத்த வேண்டும் என்றும், தொடர்ந்து பாவத்தை விருப்பத்தோடே செய்பவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என்றும் கடிந்து கொள்கிறார் (யோவான் 1:9, 3:8). இதையே நாம் கொரிந்தியர் முதலாம் நிருபத்தில், அபாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜபானம் பண்ணுகிறான் என்கின்றார். ஆக, நம்மை சுத்திகரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் (ஏசா1:15,16).

ஆராதனையில் அடுத்தபடியாக வேத ஆலோசனை இடம் பெறுகிறது. அது சபை பற்றிய ஏசாயா 2:3 ன் படி ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். என்று வாசிக்கின்றோம். எனவே, சபை கூடுதல் என்பது தேவ வார்த்தைகளை, உபதேசங்களை, ஆலோசனைகளைக் கற்றுக் கொள்ளும் இடமாக இருக்கிறது. வேதம் கிறிஸ்துவின் சபையில் மாத்திரமே பகுத்துப் போதிக்கப்படுகிறது. தேவன் மனிதனோடே தொடர்பு கொண்டதின் அடிப்படையில் பிதாக்களின் காலம், மோசேயின் காலம், கிறிஸ்துவின் காலம் என்று பகுத்துப் பார்க்கிறோம். நாம் இப்போது கிறிஸ்துவின் காலத்தில் இருப்பதால் நமக்குப் புதிய ஏற்பாட்டு, அப்போஸ்தலர் உபதேசம் கொடுக்கப்பட்டதை அறிந்து பின்பற்றுகிறோம். ராஜ்ஜியம் வந்து விட்டது, அதுவே அப் 2–ம் அதிகாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட சபை என்றும் அதுவே ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகையில் பிதாவிடம் ஒப்படைக்கப்படும் என்றும் (1 கொரி. 15:24) போதிக்கப்பட்டோம். அதையே தேடுவோம் (ஏசாயா 1:17).

நாம் அறிந்தபடி நாம் அநுசரிக்கும் அப்பம் பிட்குதலாகிய பந்தி பஸ்கா பண்டிகைக்கு ஒப்பாக உள்ளது. அதை தேவசித்தப்படி அநுசரிக்காவிட்டால் தேவன் அதை வெறுக்கிறார் (ஏசாயா 1:14) ஆகவேதான், நம்மை நாமே சோதித்தறிந்து அதில் பங்குபெற வேண்டும். இல்லையெனில் நம் சபை கூடுதல் வீணாயிருக்கும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறவனாக இருக்கிறபடியால், நாம் வெளியில் புறப்படும்போது நம்மை ஒழுங்கு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

கடைசியாக, காணிக்கை பற்றி பேசும்போது இனி வீண் காணிக்கைகளை கொண்டு வர வேண்டாம் என்கிறார் (ஏசாயா 1:13) தேவனுடைய ஆலோசனைகளுக்கும், கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும் நாம் கீழ்ப்படியாமல், பின்பற்றாமல் இருப்போமேயானால் நாம் செலுத்தும் காணிக்கைகளை தேவன் புறக்கணிக்கிறார். அப்படியிருக்க சகோதரரே உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுங்கள். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. தேவக்கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ★

**ஸ்தேவானின் தைரியம்**

1. பயமுறுத்தும் கூட்டத்தின் நடுவே வைராக்கியமான முகம்.
2. எந்நிலையிலும் உண்மையைப் பேசும் தைரியம்
3. கர்த்தர்மீதான அன்பு நம்பிக்கை விசுவாசம்
4. எதிரே மரணம் என்றாலும் அதை கர்த்தருக்காக ஏற்பதில் எத்தனை உறுதி

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

சென்ற இதழ் தொடர்ச்சி

## 3. தேவத்துவம்

**தே**வத்துவம் குறித்துப் பேசும் வசனப் பகுதி கொலோசெயர் 2:9. இங்கே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்துவில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. கிரேக்க திருமறை அகராதியில், எண் 2320 ன்படி இதுவும் கடவுள் தன்மையைக் குறிக்கும் சொல் தியோஸ் என்று குறிப்பிடப்படுகின்றது.

மேற்குறித்த இந்தக் கருத்தைத் தான் யோவான் 1:18 - ல், பிதாவை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் என்று யோவான் ஸ்நானகன் சொன்னார். யோவான் 14:9,10 ல் பிதாவை எங்களுக் காண்பியும் என்று கேட்ட தமது சீஷர்களுக்குப் பதிலளித்த இயேசு பிலிப்புவே இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா?..... என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை விசுவாசிக்க வில்லையா? நான் உங்களுடனே சொல்கிற வசனங்களை என் சுயமாய் சொல்லவில்லை என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார், என்றார். யோவான் 17:3-ல் ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று கிறிஸ்து ஜெபித்தார்.

மேற்குறித்த மூன்று வசனங்களும், இயேசுவும் பிதாவும் ஒரே நபர்த்துவத்தைக் கொண்டிருப்பதாகவோ பிதாவாகிய தேவனை தனித்தோ காட்டவில்லை. யோவான் 1:18-ன் படி தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் என்று தெளிவுபடுத்துவதால் திரியேகக்காரர்களின் போதனைப்படி பிதாவாகிய தேவன் தாமே குமாரனாக தமது மடியில் தாமே இருக்க முடியுமா? எனவே, பிதாவாகிய தேவனுடைய மடியில் குமாரன் இருப்பதை சுட்டிக் காட்டி இரு வேறுபட்ட நபர்த்தத்துவத்தை யோவான் குறிப்பிட்டார்.

தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). பிதாவின் மடியில் குமாரன் இருக்கும் காட்சி பரலோக மகிமையை

வெளிப்படுத்துகிறது. இயேசு ஆவியில் வெளிப்பட வில்லை. பிதா அவருக்கு ஒரு சரீரத்தை ஆயத்தமாக்கினார் (எபிரேயர்10:5) இயேசுவுக்கு ஒரு சரீரம் கொடுக்கப்பட காரணம் என்ன?

1. இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபி.9:22) மாம்ச சரீரத்திலிருந்து மட்டுமே இரத்தஞ்சிந்துதல் சாத்தியம் (எபி.10:15,16). எனவே ஒரு சரீரம் கொடுக்கப்பட்டது.

2. சரீர வாழ்க்கையிலும் எப்படி பாவ மில்லாத வாழ்க்கையை வாழ வேண்டும். வாழ முடியும் என்பதற்கு முன் மாதிரியைக் காட்டும் படியாக (எபி.10:15,16) சரீரம் கொடுக்கப்பட்டது.

3. தேவத்துவத்தின் தன்மை இதுவே என்று காட்டும்படியாக அவருக்கு அந்த சரீரம் கொடுக்கப்பட்டது. அந்த சரீரத்தில் பாவமில்லை. பழுதற்ற ஆட்டுக் குட்டியாக இயேசு வாழ்ந்து காட்டினார் (மத்தேயு 5:45, கொலேசெயர் 2:9).

யோவான்14:9,10-ன்படி கிறிஸ்துவினுடைய குணாதிசயங்களைக் **கண்டவன்** பிதாவைக் கண்டதற்குச் சமம் என்று பேசுகிறார். இதிலேயும், தாமும் பிதாவும் ஒரே நபர்த்துவம் என்று குறிப்பிடுவதில்லை. நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை விசுவாசிக்கவில்லையா? என்று கிறிஸ்து கேட்டதன் பொருள் இருவரும் ஒருவர் ஒரே நபர் என்பதைத் தானே காட்டுகிறது? என்று சிலர் வாதிடுவது உண்டு. அப்படியானால், யோவான் 15:5 ல், **ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.** என்றும் கிறிஸ்து சொன்னார். அப்படியானால் கிறிஸ்துவும் அவருடைய சீஷனும் ஒரே நபரா, மேலும் இந்த வசனம் பிதாவும் குமாரனும் இருவேறு நபர்களாயினும் இருவரும் சமமாயிருப்பதும், அவரும் தேவனாக இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார். ஒருவன் கிறிஸ்துவிலும், கிறிஸ்து ஒருவனிலும் இருப்பது அவனை குருவைப் போல் மாற்றும் தன்மையைக் குறிக்கிறது (லூக்கா 6:40).

யோவான் 17:3 – லும், பிதாவாகிய தேவனையும் ஒருவன் அறிய வேண்டும்; குமாரனாகிய கிறிஸ்துவையும் அதே போல் அறிய வேண்டும் என்று குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனை மட்டும் உயர்த்தி குமாரனாகிய கிறிஸ்துவை மட்டுப்படுத்தும் தனித்துவக் கொள்கையாளர்களுக்கு இது ஒரு சாட்டையடி. ஏனெனில், நித்திய ஜீவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது என்று யோவான் குறிப்பிட்டார் (1யோவான் 5:10–12). இங்கேயும் பிதாவும் குமாரனும் தனித்தனியே பிரித்து காட்டப்படுகிறது. பிதாவில் விசுவாசம் வைக்கிறவன் குமாரனிலும் விசுவாசம் வைத்தால் மட்டுமே தேவன் குமாரனைக் குறித்து கொடுத்த சாட்சியை விசுவாசிப்பதாக பொருள்படும். அப்படி

குமாரனையும் விசுவாசிப்பதின் மூலமே அவரில் இருக்கும் ஜீவனைக் கண்டடைவான் என்று தெளிவாக யோவான் எழுதுகிறார். ஆக, தெய்வீகத் தன்மையில் ஒருவருக்கொருவர் உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ அல்ல; தகப்பன் மகன் இடையே உள்ளே வித்தியாசமன்றி வேறே வித்தியாசம் எதுவுமில்லை.

**முடிவுரை:**

1. **தேவன்** என்பதைப் பன்மையாலும் (ஏலோஹிம்) ஒருமையிலும் (ஏலோஅ) திருமறை போதிக்கிறது.

2. அப்போஸ்தலர் 17:29 ரோமர், 1:20 கொலோசெயர் 2:9 ஆகிய வசனங்கள் மூன்றுமே தேவத்துவம் என்று தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்தே ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தைக் கொண்டவைகளல்ல என்பது தெளிவாக்கப்படுகிறது. இவை மூன்றுமே தேவனுடைய பண்பை அல்லது குணாதிசயத்தைக் குறிக்கும் வேறுபட்ட வார்த்தைகளில் மூலபாஷையில் பேசுகிறது. பொருளில் (அர்த்தத்தில்) வேறுபட்டிருந்தால் மொழிபெயர்ப்பாளர்கள் அனைத்து மொழிகளிலும் ஒரே பதத்தைப் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். இது **தண்ணீர், நீர், ஜலம்** எனும் வேறுபட்ட மூன்று வார்த்தைகளும் ஒரே பொருளைக் கொடுப்பது போன்றதுதான். வேறுபட்ட அர்த்தங்களைக் கொடுப்பதில்லை. மூன்றுமே **தெய்வீகப் பண்பைச் சுட்டிக்காட்டுகின்றன.**

3. **தெய்வம்** என்பது (அப்.17:29) ரோமர் 1:20 லும் கொலோசெயர் 2:9 லும் பேசப்படுகிற தேவத்துவ பண்பையே (தெய்வீகத்தன்மையை) சுட்டிக் காட்டுகிறது (எரே.10:10).

4. பிதாவாகிய தேவனைப் போலவே, குமாரனும் பரிபூரணப்பட்டவர். பரிசுத்த ஆவி ஏழு ஆவி என்று சொல்வதன் மூலம் தெய்வீகப் பரிபூரணமுடையவர் என்று தெளிவுபடுத்துகிறார் (ஏசாயா 11:2; வெளி 1:7; ஒப்பிடுக. மத்தேயு 18:20-21).

5. ஆக, பிதா குமாரன் பரிசுத்த ஆவி மூவரும் மூன்று தனிப்பட்ட நபர்த்துவத்தில் **(God Head)** ஒரே தேவத்துவத்தில் உள்ளனர். அது பன்மைப் பொருளைக் குறிக்கும் ஒருமைச்சொல்.

★

# நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?

**தே**வனை அறியாதவர்களும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளில் தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்கள் எல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் [ 2தெச. 1:7-10].

சுவிசேஷத்திற்குக், கீழ்ப்படியாத ஒருவர், நித்திய அழிவில் இழந்து போகிறபடியால் சுவிசேஷம் என்றால் என்ன? அதற்கு எப்படிக் கீழ்படிவது என்கின்ற கேள்வி எழும்புகிறது.

**சுவிசேஷம் என்றால் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல் இதற்கான பதிலைக் கொடுக்கிறார். அன்றியும் சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தப் பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்; அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின் படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து [1கொரி.15:1-4]. ஏசாயா 53 ஆம் அதிகாரத்தை பார்க்கவும்.

நாம் பாவம் செய்ததினால் நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை கிறிஸ்து அவராகவே முன்வந்து அந்த தண்டனையை ஏற்றுக்கொண்டார்.

**சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவது அவ்வளவு அவசியமானதா?**

ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற தீர்மானத்தைத் தள்ளிப்போடக் கூடாது என்பதற்கான இரண்டு காரணங்களை நாம் இப்போது காணலாம்:

**வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மை :** நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமல்ல என்று அனுதினமும் நினைவுபடுத்தப்

படுகிறோம். எதிர்பாராத நேரங்களில் பெரும்பாலும் வியாதி, விபத்து போன்றவைகள் மரணத்தைக் கொண்டு வருகின்றன. எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்லுகிறார். **அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9:27) என்று.**

**எதிர்பாராத விதத்தில் கிறிஸ்துவின் வருகை:** கிறிஸ்து எதிர்பாராத நேரத்தில் வருவார் என்று வேதாகமம் போதிக்கிறது. அவருடைய வருகை இரவிலே திருடன் வருகிறவிதமாய் இருக்கும் (1தெச.5:2). இது எப்போது சம்பவிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

**சுவிசேஷம் புரப்படுகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்:**

சிலர் சுவிசேஷத்தை புரட்டுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரித்திருந்தார். வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலா.1:8).

**யார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய ணேடும்?**

மறுபடியும் பிறக்க விரும்புகிற யாவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (யோவான் 3:3-5). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததினால் இழந்துபோன யாவரும் இரட்சிக்கப்பட இப்படிச் செய்ய வேண்டும்.

தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். உண்மையான ஞானஸ்நானமானது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலாகும் (ரோமர் 3:7) (கொலோ.2:12;யோவான் 3:23). போதிக்கப்படத்தக்கவர்கள்; சுவிசேஷத்தைப் புரிந் கொள்ளக் கூடியவர்கள் மாத்திரமே அதற்கு கீழ்படிய வேண்டும். வேத வசனங்களின் அடிப்படையில் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் அவர்கள் பாவங்களை ஒருபோதும் மன்னிப்பதில்லை.

கிறிஸ்துவை தங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்ளவும், பாவிகளுடைய ஜெபத்தை செய்யும்படியாக சொல்லப்பட்டவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த செயல்(லூக்கா 18:9-14) வசனங்களில் நாம் பார்க்கும் ஆயக்காரன், பரிசேயன் சம்பவத்தை அடிப்படையாக வைத்து தவறான முறையில் போதிக்கப்படுவதாகும்.இந்த சம்பவமானது நாம் சுயநீதியுடையவர்களாய் இருக்கக்கூடாது, மாறாக, தாழ்மையான மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டும் என்று நமக்கு போதிக்கிறது. ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று போதிப்பவர்கள் எல்லாம் ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமலே இரட்சிக்கப்பட முடியும் என்று போதிக்கிறார்கள். ஜெபத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள் என்று போதிக்கப்பட்டவர்களெல்லாம் சுவிசேஷத்திற்குக் கீழ்படிய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் பாவம் செய்யும்போது ஜெபிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள் (யாக்கோபு 5:16;அப்.8:22). ஆயினும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத ஒருவர் பாவமன்னிப்பிற்காக ஜெபிக்க வேண்டும் என்று கிறிஸ்துவாலோ அல்லது அவருடைய அப்போஸ்தலர்களாலோ கட்டளை கொடுக்கப்படவில்லை. ஒரு பாவி தேவனுக்கு கீழ்ப்படியும்போதுதான் பாவ மன்னிப்பைப் பெறுகிறார். இரட்சிக்கப் படுவதற்காக அவர் செய்த ஜெபத்தினால் பாவமன்னிப்பைப் பெறுவதில்லை. புற்று நோயால் மரணத்தருவாயிலிருந்த ஒரு மனிதர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதோடு இரட்சிப்பிற்கு விசுவாசமும் மனந்திரும்புதலும் அவசியம் என விசுவாசித்த ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்தார். அந்த பெண் தன்னுடைய பிரசங்கியாரை அந்த மனிதனிடம் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த மனிதன் ஏற்கனவே கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்த ஒரு நபர்தான். அவர் ஏற்கனவே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய தன்னுடைய மனதில் தீர்மானித்திருந்தார். ஆயினும், அந்த பிரசங்கியார் இரட்சிக்கப் படுவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதில் நம்பிக்கை இல்லாதவராயிருந்தார். இப்போது மரணத் தருவாயில் படுத்திருந்த அந்த மனிதனின் படுக்கையைச் சுற்றி இந்த மூன்று பேரும் நின்று கொண்டு அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு ஜெபித்தார்கள். அந்த மனிதன் தன் மனைவியைப் பார்த்து நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று சொன்னான். பாவமன்னிப்பின் கருத்தை அவன் புரிந்துகொள்ளவில்லை. பிரசங்கியார் அந்த மனிதனை பரலோக ராஜ்யத்தின் வாசல்வரை கொண்டுபோய் விட்டார். ஆனால், அதன் உள்ளே எப்படி பிரவேசிக்க வேண்டும் என்று போதிக்கவில்லை. இரட்சிக்கப்பட என்ன செய்யப்பட வேண்டுமோ அதைத்தான் செய்துவிட்டதாக நினைத்து அந்த மனிதன் மரித்து விட்டான் (அப். 2:38; மாற்கு 16:15, அப். 22:16). நிச்சயமாகவே, நம்முடைய கர்த்தர் கட்டளையிட்டபடியே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. இல்லையென்றால், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவோம் (தெச.1:10). ஆகவே, நாம் ஒவ்வொருவரும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோம். ★

## நாளும் நடப்பும்

- மே-4ல் 1,6,9,11 ஆகிய வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட நூல்கள் வெளியீடு. – அமைச்சர்
- அறிமுகமான முதல் நிதியாண்டில் ரூ.7.41 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூல். – மத்திய நிதியமைச்சகம்
- நாடு முழுவதும் மே மாதத்தில் 650 அஞ்சலக பேமண்ட் வங்கிக் கிளைகள் தொடங்கப்படும். – மத்திய அமைச்சர்
- வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவோர் பட்டியலில் இந்தியர்கள் மீண்டும் முதலிடம் – உலக வங்கி

நான் ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறேன் (எபே 2:16)

இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு அதன் பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன் (கொலோ. 1:13)

நான் மீட்கப்பட்டிருக்கிறேன். என் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது (கொலா 1:14)

கிறிஸ்து மகிமையின் நம்பிக்கைக்காக எனக்குள் இருக்கிறார் (கொலொ 1:27)

நான் ஆவிக்குரிய ரீதியில் விருத்தசேனம் பண்ணப்பட்டிருக்கிறேன். என்னுடைய பாவ சரீரம் களைந்து போடப்பட்டிருக்கிறது (கொலோ 2:11)

நான் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (கொலோ 2:12, 13).

நான் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைப் பெற்றிருக்கிறேன் (2 தீமோ 1:7)

நான் எனது ரீதியின் கிரியைகளின் படி இரட்சிக்கப்படாமல் அவருடைய இரக்கத்தின் படி இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் (தீத்து. 3:5)

நான் இரக்கத்தைப் பெறவும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டனை சேரும் உரிமை பெற்றிருக்கிறேன் (எபி. 4:16)

நான் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் படி மகா மேன்மையும், அருமையுமான அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ( பேது. 1:4).